294) இலைக்கஞ்சி தயாரிக்க பயன்படுவது,
(1) பாகற்காய் (3) பூசணி
(2) வல்லாரை (4) முடக்கொத்தான்

295) உணவைப் பாதுகாக்கும் முறை அல்லாதது,
(1) குளிரேற்றியில் வைத்தல் (3) சீனிப்பாணியிடல்
(2) உப்பிடல் (4) மரத்தில் வைத்தல்

296) பொதி செய்யப்பட்ட உணவை வாங்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்,
(1) காலாவதியாகும் திகதி (3) உற்பத்தித் திகதி
(2) நிறை (4) மேற்கூறிய யாவும்

www.lkedu.lk







மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

**Medium**

**தமிழ்/ English**

**தரம்**
**01-A/L**

**76667-4945**

**தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்**
**தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன**

**www.learneasy.lk || www.lkedu.lk**

297) வெயிலில் வைக்கப்பட்ட உணவில் அவதானிக்க கூடியது,
(1) உணவுப் பொருட்கள் நன்கு உலர்ந்து போகியிருக்கும்.
(2) உணவுப் பொருட்களின் நிறம் மாற்றமடைந்திருக்கும்.
(3) உணவின் இயற்கை மணம் மாற்றமடைந்திருக்கும்.
(4) மேற்கூறிய யாவும் சரி.

298) உணவை தயார் செய்யும் போது சுயசுத்தம் பேண அணிவது,
(1) கம்பளி ஆடை
(2) பருத்தி ஆடை
(3) ஏப்ரன்
(4) போர்வை

299) ஏப்ரன் ஒன்றைத் தைக்கப் பயன்படாத தையல் வகை,
(1) பெரிய நூலோடல்
(2) மீன்முள்ளுத்தையல்
(3) சங்கிலித்தையல்
(4) கம்பளித்தையல்

300) உப்பிட்டு உலர்த்துதல் மூலம் நீண்டகாலம் வைத்துப் பேணிப் பாதுகாக்கப்படும் உணவு,
(1) மீன்
(2) மரவள்ளிக்கிழங்கு
(3) இறைச்சி
(4) தேங்காய்

301) அசுத்தமான நீரினால் ஏற்படும் நோய்,
(1) டெங்கு
(2) கொரோனா
(3) நெருப்புக்காய்ச்சல்
(4) தலைவலி

302) உடலுக்கு சக்தியைத் தரும் உணவு,
(1) சோறு
(2) கீரை
(3) பருப்பு
(4) வல்லாரை

303) உணவு சமைப்பவர் உணவைச் சமைக்கும் போது தவிர்க்க வேண்டியது,
(1) ஏப்பரன் அணிதல்
(2) வானொலி கேட்டல்
(3) தலைசொறிதல்
(4) பாதணி அணிதல்

304) இறைச்சியை பாதுகாக்க ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை,
(1) அவித்து வைத்தல்
(2) குளிரூட்டியில் வைத்தல்
(3) பொரித்து வைத்தல்
(4) தேனில் வைத்தல்

305) நாம் ஏன் நிறையுணவை உண்ண வேண்டும்,
(1) நோயெதிர்ப்புச் சக்தியைப் பெறுவதற்கு
(2) சுவை நிறைந்தது என்பதற்கா
(3) எல்லாப் போசணையும் எமக்குக் கிடைப்பதற்காக
(4) விரைவாக வளர்வதற்காக

www.lkedu.lk

306) புரதச் சத்து அதிகம் கொண்ட உணவு வகை,
(1) பாண் (3) கரட்
(2) கடலை (4) சோறு

307) நாம் சோடாப்பானத்தைத் தவிர்க்க வேண்டியதன் காரணம்,
(1) இரசாயன பாதுகாப்புப் பொருட்கள் உள்ளதால்
(2) அதிகளவு இரசாயன நிறப்பொருட்கள் உள்ளதால்
(3) சீனி அதிகம் உள்ளதால்
(4) மேற்கூறிய எல்லாம்

308) அதிக இனிப்புக்களை உண்பதால் ஏற்படும் நோய்,
(1) வயிற்றுளைவு (3) நீரிழிவு
(2) வயிற்றோட்டம் (4) தடிமன்

309) நாம் கண்டிப்பாக தவிர்க்கக்கூடாத வேளை உணவு,
(1) இரவு உணவு (3) மாலை உணவு
(2) காலை உணவு (4) மதிய உணவு

310) ஈரலிப்பான உணவுப் பொருட்கள் கெட்டுப் போகக் காரணமாக அமைவது,
(1) ஈக்கள் மொய்த்தல் (3) பங்கசு படர்தல்
(2) வைரசு பெருகுதல் (4) நுளம்பு மொய்த்தல்

311) வீட்டில் உணவை அசுத்தமடையச் செய்யும் பிராணி அல்லாதது,
(1) நாய் (3) பூனை
(2) எலி (4) நுளம்பு

312) பாதுகாப்பற்ற உணவை உண்பதால் ஏற்படும் நோய் அல்லாதது,
(1) வாந்திபேதி (3) வயிற்றுளைவு
(2) வயிற்றோட்டம் (4) டெங்கு

313) பின்வருவனவற்றில் இயற்கை அனர்த்தங்களல்லாதது,
(1) வெள்ளப்பெருக்கு (3) நிலநடுக்கம்
(2) சூறாவளி (4) வீதி விபத்து

314) மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் நிகழ்வு அல்லாதது,
(1) மின்சாரத் தாக்குதலுக்குள்ளாதல்.
(2) வீதி விபத்துக்கள்.
(3) உணவு மாசடைதலால் ஏற்படும் விபத்துக்கள்.
(4) இடிமின்னற் தாக்கம்.

315) பின்வருவனவற்றுள் மண்சரிவு அபாயமுள்ள மாவட்டம்,
(1) அம்பாறை (3) வவுனியா
(2) அம்பாந்தோட்டை (4) பதுளை

www.lkedu.lk

316) எமது சூழலில் உள்ள பாதுகாப்பான இடமாவது,
(1) யானைகள் பாதையைக் கடக்கும் இடங்கள்.
(2) பழுத்த தேங்காய் இருக்கும் தென்னந்தோட்டம்.
(3) பாதுகாப்புச்சுவர் இல்லாத கிணறுகள்.
(4) வழிபாடு செய்யுமிடம்.

317) மின்சார வேலை செய்வோர் பயன்படுத்தும் பொருட்கள் அல்லாதது,
(1) தலைக்கவசம்
(2) மின்சோதிப்பான்
(3) இடுப்புப்பட்டி
(4) பாதுகாப்புக்கண்ணாடி

318) சிறுவர்கள் தவிர்க்க வேண்டியது,
(1) தொலைக்காட்சி பார்த்தல்
(2) தொலைபேசியில் கதைத்தல்
(3) வகுப்புக்கு செல்லுதல்
(4) பட்டாசு கொழுத்துதல்

319) உருக்கி ஒட்டுபவர் பயன்படுத்தும் பொருளானது,
(1) மூக்குக்கண்ணாடி
(2) இடுப்புப்பட்டி
(3) பாதுகாப்புக்கண்ணாடி
(4) மின்சோதிப்பான்

320) தோட்ட வேலை செய்வோருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விலங்கு,
(1) தவளை
(2) பாம்பு
(3) ஆமை
(4) முதலை

321) தாதியர்கள் வெண்ணிற ஆடை அணிவதற்கான மிகப் பொருத்தமான காரணமானது,
(1) நோயாளிகள் இலகுவாக அடையாளம் காணுவதற்கு
(2) வைத்தியசாலையின் சட்டத்திற்கு
(3) சுத்தத்தை உயர்வாக பேணுவதற்கு
(4) தாதியர்களுக்கு மிகவும் விரும்பமானது என்பதற்கு

322) பாடசாலையில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடம்,
(1) விளையாட்டு முற்றம்
(2) பிராத்தனை மண்டபம்
(3) நூலகம்
(4) வகுப்பறை

323) பின்வருவனவற்றுள் பாதுகாப்பற்ற இடமாவது,
(1) படிக்கட்டு வரிசை
(2) மண்சரிவு ஏற்படும் இடங்கள்
(3) முட்புதர்கள்
(4) யாவும் சரி

324) பின்வருவனவற்றில் சமூக விரோத செயலானது,
(1) போதைப் பொருட் பாவனை
(2) சிறுவர் துஸ்பிரயோகம்
(3) திருடுதல்
(4) மேற்கூறிய யாவும் சரி

www.lkedu.lk

325) குமார் மின்சாதனங்களுடன் வேலை செய்யும் போது காலில் செருப்பு அணிந்தான். இதற்கு காரணம்,
(1) குமாருக்கு செருப்பு அணிவது மிகவும் பிடிக்கும் என்பதால்
(2) குமாருக்கு காலில் நோய் ஏற்பட்டது என்பதால்
(3) பாதுகாப்பு கிடைக்கும் என்பதால்
(4) குமாருக்கு செருப்பு அணிவது பொழுதுபோக்கு என்பதால்

326) சீலன் இரசாயன கலப்புள்ள உணவுகளை அதிகம் உண்பான், அவனுக்கு ஏற்படக் கூடிய நோய்,
(1) நீரிழிவு
(2) புற்று நோய்
(3) டெங்கு
(4) கண் நோய்

327) தற்போது வயலில் பல்வேறுபட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மிகப் பொருத்தமான காரணம்,
(1) இயந்திரங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றமை.
(2) விவசாயிகள் விரும்புகின்றமையால்.
(3) தற்போது தொழிநுட்பம் மிக வளர்ச்சியடைந்துள்ளமை.
(4) எல்லோரிடமும் அதிக பணம் உள்ளமையால்

328) ஒரு நோயாளியிடமிருந்து சுகதேகி ஒருவருக்கு தொற்றக்கூடிய நோயானது,
(1) நீரிழிவு
(2) தலைவலி
(3) புற்றுநோய்
(4) சொறி

329) பாதுகாப்புக் கருவிளைப் பயன்படுத்தி விளையாடப்படும் விளையாட்டு?
(1) கரப்பந்து
(2) பூப்பந்து
(3) கிரிக்கெட்
(4) எட்டுக்கோடு

330) அதிகளவு கொழுப்பு அடங்கிய உணவை உட்கொள்வதால் ஏற்படும் நோய்,
(1) நீரிழிவு
(2) இரப்பை அழற்ச்சி
(3) புற்றுநோய்
(4) இதய நோய்

331) இனிப்பான உணவு, மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்பதால் ஏற்படும் நோய்,
(1) இரப்பை அழற்ச்சி
(2) நீரிழிவு
(3) புற்றுநோய்
(4) உயர் குருதியமுக்கம்

332) புகைபிடிப்பதால் ஏற்படும் நோய்,
(1) நீரிழிவு
(2) இதய நோய்
(3) இரப்பை அழற்ச்சி
(4) புற்று நோய்

www.lkedu.lk

333) தூய நீரின் பண்பானது,
(1) நிறமில்லை (3) மணமில்லை
(2) சுவையில்லை (4) மேற்கூறிய எல்லாம்

334) நீருக்கு வடிவம்,
(1) உண்டு (3) இல்லை
(2) முக்கோண வடிவம் (4) யாவும் சரி

335) பனிக்கட்டியை கையில் வைக்கும் போது ஏற்படும் உணர்வு,
(1) மிகவும் சூடாக இருக்கும் (3) கடி ஏற்படும்
(2) குளிர்ச்சியை உணரலாம் (4) மேற்கூறிய யாவும் சரி

336) பனிக்கட்டி ஒன்றை நீர் கொண்ட முகவை ஒன்றில் இடும் போது ஏற்படும் அவதானிப்பு,
(1) உடனே அமிழும் (3) கரையும்
(2) ஓடும் (4) பனிக்கட்டி நீரில் மிதக்கும்

337) வீட்டில் நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள்,
(1) நீர்க் குழாய்களில் வெடிப்புகள் ஏற்படல்.
(2) குடிநீரைத் திறந்தபடி வைத்தல்.
(3) அளவுக்கு அதிகமாக நீரைப் பயன்படுத்துதல்.
(4) மேற்கூறிய யாவும்.

338) பாடசாலைகளில் நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள்,
(1) நீர்க்குழாயினை கவனயீனமாக திறந்து வைத்தல்.
(2) அளவுக்கதிமாக தாவரங்களுக்கு நீர் பாய்ச்சுதல்.
(3) நீரலங்காரங்களுக்கு அதிக நீரை பயன்படுத்துதல்.
(4) மேற்கூறிய யாவும்

339) நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினையானது,
(1) நீரில் நோய்க்கிருமிகள் பெருகுவதால் தொற்று நோய் ஏற்படும்.
(2) நீரிலிருந்து துர்நாற்றம் வீசும்.
(3) நுளம்புகள் பெருகும்.
(4) மேற்கூறிய யாவும்.

340) நீர் அசுத்தமடைவதால் ஏற்படும் நோய் அல்லாதது,
(1) வயிற்றோட்டம் (3) வாந்திபேதி
(2) நெருப்புக்காய்ச்சல் (4) நீரிழிவு

341) இலங்கையின் நீர்மின் உற்பத்தி நிலையம் உள்ள இடம்,
(1) அம்பாந்தோட்டை (3) கொழும்பு
(2) திருகோணமலை (4) அம்பாறை

www.lkedu.lk

342) பின்வருவனவற்றுள் நீரில் கரையாத பொருள் எது?
(1) பனிக்கட்டி
(2) பிளாஸ்திக்
(3) உப்பு
(4) கொண்டிசுப்பளிங்கு

343) நாம் போதியளவு நீரை அருந்தாமையால் எமக்கு ஏற்படும் நோய்,
(1) காய்ச்சல்
(2) டெங்கு
(3) கழிச்சல்
(4) மலச்சிக்கல்

344) அநேகமாக நகர்ப்புற மக்கள் நீரைப் பெறுவது,
(1) குழாய் மூலம்
(2) ஆறுகளின் மூலம்
(3) கிணறுகள் மூலம்
(4) போத்தல்களின் மூலம்

345) பாதசாரிக்கடவைக்கு தற்போது பயன்படுத்தப்படும் நிறம்,
(1) பச்சை
(2) சிவப்பு
(3) வெள்ளை
(4) மஞ்சள்

346) பின்வரும் வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,



(1) வாகனங்கள் நிறுத்தத்தடை
(2) ஒலி எழுப்பத்தடை
(3) ஒலி எழுப்பலாம்
(4) வைத்தியசாலை

347) பின்வரும் எச்செயற்பாட்டில் வீதி விபத்து ஏற்படும்,
(1) வீதியில் வலது புறத்தில் செல்லும் போது
(2) வீதி ஓரமாக நிற்கும் போது
(3) பாதசாரிக் கடவையில் கடக்கும் போது
(4) தொலைபேசியில் உரையாடி வீதியில் செல்லும் போது

348) பாதசாரிக்கடவைக்கு முன்னர் பயன்படுத்திய நிறம்,
(1) வெள்ளை
(2) நீலம்
(3) மஞ்சள்
(4) கறுப்பு

349) பின்வரும் வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,



(1) பாடசாலை
(2) கோயில்
(3) வைத்தியசாலை
(4) விகாரை

www.ikedu.lk

350) பின்வருவனவற்றுள் நீர்ப் போக்குவரத்து அல்லாதது,
(1) படகு
(2) நீர்மூழ்கிக்கப்பல்
(3) கப்பல்
(4) உலங்குவானூர்தி

351) பின்வரும் வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,



(1) பின்னால் பாதை வேலை
(2) முன்னால் பாதை வேலை
(3) முன்னாலும் பின்னாலும் பாதை வேலை
(4) முன்னால் சிறுவர் கடவை

352) வாகனங்கள் செலுத்தும் சாரதிகள் தம்முடன் வைத்திருக்க வேண்டியது,
(1) அடையாள அட்டை
(2) பணம்
(3) வங்கிப் புத்தகம்
(4) சாரதி அனுமதிப்பத்திரம்

353) பாதசாரிக்கடவையூடாக நாம் வீதியைக் கடக்கும் போது தவிர்க்க வேண்டிய விடயமாவது,
(1) மற்றொருவருடன் உரையாடிச் செல்லுதல்.
(2) தொலைபேசியில் உரையாடிச் செல்லுதல்.
(3) குழுவாக பாதுகாப்பற்று செல்லுதல்.
(4) மேற்கூறிய யாவும் சரி

354) இப்போக்குவரத்துப் பொலிசார் குறிப்பது,



(1) நிறுத்துங்கள்
(2) முன்னே வாருங்கள்
(3) செல்லுங்கள்
(4) ஆயத்தமாகுங்கள்

355) புகையிரதப் சேவையால் எமக்குக் கிடைக்கும் அனுகூலம் அல்லாதது,
(1) குறைந்த கட்டணம்
(2) விரும்பிய இடத்திற்கு பயணிக்கலாம்.
(3) ஒரு தடவையில் அதிகமானோர் பயணிக்கலாம்.
(4) விரைவாகப் பயணம் செய்யலாம்.

356) ஒளிச்சமிக்ஞை விளக்கில் சிவப்பு நிறம் காட்டப்பட்டிருத்தல்,
(1) புறப்படுதல்
(2) வாகனங்களை நிறுத்துதல்
(3) புறப்படத் தயாராதல்
(4) மேற்கூறிய எல்லாம்

357) ஒளிச்சமிக்ஞை விளக்கில் செம்மஞ்சள் நிறம் காட்டப்பட்டிருத்தல்,
(1) புறப்படுதல்
(2) நிறுத்துதல்
(3) புறப்படத் தயாராகுதல்
(4) யாவும் சரி

www.ikedu.lk

358) வீதி விபத்துக்களை தவிர்க்க நாம் செய்ய வேண்டியது,
(1) வீதியில் வேகமாகச் செல்லுதல்.
(2) வீதிப் போக்குவரத்து பொலிசாருக்கு மதிப்பளித்தல்.
(3) தலைக்கவசம் அணிந்து செல்லுதல்.
(4) வீதி விதிகளைக் கடைப்பிடித்தல்.

359) பின்வரும் வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,




(1) வாகனங்கள் நிறுத்தத்தடை
(2) வாகனங்கள் நிறுத்தலாம்
(3) பஸ் வண்டி தரிப்பிடம்
(4) ஒலி எழுதப்பத்தடை

360) பேருந்தில் ஏறியவுடன் செய்ய வேண்டியது,
(1) முன் வாசல் பக்கம் செல்லுதல்.
(2) பயணச் சீட்டைப் பெறுதல்.
(3) ஆசனத்தில் இருத்தல்.
(4) பயணப் பொதிகளை பாதுகாப்பாக வைத்தல்.

361) இப்போக்குவரத்துப் பொலிசார் குறிப்பது,



(1) நிறுத்துங்கள்
(2) முன்னே வாருங்கள்
(3) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.
(4) செல்லுங்கள்

362) பின்வருவனவற்றில் தரைப்போக்குவரத்து அல்லாதது,
(1) மோட்டார் சைக்கிள்
(2) புகைவண்டி
(3) சொகுசு பஸ்
(4) படகு

363) பின்வரும் எச்செயற்பாடு வீதிப்போக்குவரத்திற்கு இடையூறாக அமையும்,
(1) வீதியில் வலது பக்கமாக நடந்து செல்லுதல்.
(2) பாதசாரக்கடவையினூடாக வீதியைக் கடத்தல்.
(3) வீதியின் ஓரத்தில் தொலைபேசியில் உரையாடுதல்.
(4) வீதியில் கிரிக்கெட் விளையாடுதல்.

364) மோட்டார் சைக்களில் பயணிப்போர் தாம் பாதுகாப்பிற்காக கட்டாயம்,
(1) தலைக்கவசம் அணிய வேண்டும்.
(2) குடை வைத்திருக்க வேண்டும்.
(3) மெதுவாக பயணிக்க வேண்டும்.
(4) சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்.

www.lkedu.lk

365) பேருந்தில் விசேட ஆசனம் ஒதுக்கப்பட்டிருப்போர்,
(1) பாடசாலை மாணவர்கள் (3) அதிபர்கள்
(2) மதகுருமார்கள் (4) சிறுவர்கள்

366) பொதுப்போக்குவரத்து அல்லாதது,
(1) பேருந்து (3) புகையிரதம்
(2) ஆகாய விமானம் (4) துவிச்சக்கரவண்டி

367) வீதியில் பாதசாரிகள் எப்போதும்,
(1) வலப்பக்கமாக நடந்து செல்ல வேண்டும்.
(2) இடப்பக்கமாக நடந்து செல்ல வேண்டும்.
(3) நடுவில் செல்ல வேண்டும்.
(4) விரும்பியவாறு செல்ல வேண்டும்.

368) பாதசாரிகள் கவனமாக பயணிக்க வேண்டிய ஒரு பாதை,
(1) ஒற்றையடிப்பதை (3) மிதிவண்டிப்பதை
(2) விலங்குகள் கடக்கும் பகுதி (4) கடற்கரைப்பாதை

369) பேருந்தில் பயணிக்கும் போது நாம் தவிர்க்க வேண்டியது,
(1) வரிசையாக ஏறுதல்.
(2) முன்வாசல் வழியே ஏறுதல்.
(3) பின் வாசல் வழியே இறங்குதல்.
(4) பின் வாசல் வழியே ஏறுதல்.

370) வீதிச்சமிக்ஞை விளக்கு இல்லாவிட்டால் நாம் எதிர்கொள்வது,
(1) வீதி விபத்துக்கள்
(2) போக்குவரத்து தாமதம்
(3) வீதியைக் கடப்பது சிரமம்
(4) யாவும் சரி

371) தாவர வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்,
(1) நீர் (3) சூரிய ஒளி
(2) வளமான மண் (4) மேற்கூறிய யாவும்

372) பின்வரும் வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,



(1) முன்னால் பாதுகாப்பான புகையிரதக்கடவை
(2) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை
(3) வாகனங்கள் நிறுத்தத்தடை
(4) வைத்தியசாலை

www.lkedu.lk

373) வித்து முளைப்பதற்கு தேவையாக காரணிகள்,
(1) வளி
(2) நீர்
(3) தகுந்த வெப்பம்
(4) மேற்கூறிய யாவும்

374) மண்ணைப் பண்படுத்தப்படும் பின்வரும் கருவியின் பெயர்,



(1) மண்வெட்டி
(2) முள்மண்வெட்டி
(3) குப்பைவாரி
(4) கைமுள்ளு

375) தண்டுத்துண்டங்களை நடுவதன் மூலம் புதிய தாவரங்களை உருவாக்குவது,
(1) மிளகாய்
(2) தக்காளி
(3) கத்தரி
(4) மரவள்ளி

376) வித்துக்களை நேரடியாக நாட்டி புதிய தாவரங்களை உருவாக்குவது,
(1) மரவள்ளி
(2) வற்றாளை
(3) கரும்பு
(4) அவரை

377) வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு நன்மை செய்யும் பிராணி,
(1) அணில்
(2) வெளவால்
(3) தேனீ
(4) கிளி

378) பயிர் நிலத்திற்கு பசளையிடுவதற்கு காரணம்,
(1) மண்ணை வளப்படுத்துவதற்கு
(2) மண் அங்கிகளை பெருக்குவதற்கு
(3) மண்ணின் ஈரப்பதனை பேணுவதற்கு
(4) மண்ணரிப்பை தடுப்பதற்கு

379) பின்வருவனவற்றில் கிராமிய விளையாட்டு யாது?
1. கரப்பந்து
2. சடுகுடு
3. கரம்
4. காற்பந்து

380) பின்வரும் உபகரணமாகிய வேலைக்காரன் கம்பை பயன்படுத்தும் தொழிலாளி யார்?
1. மேசன்
2. தச்சன்
3. கொல்லன்
4. விவசாயி

381) சோயா அவரையில் அதிக அளவில் உள்ள போசணைப் பொருள்,
1. புரதம்
2. கொழுப்பு
3. கல்சியம்
4. காபோவைதரேற்று

www.lkedu.lk

382) உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 11
2. 12
3. 7
4. 15

383) தையல் ஊசிகள் துருப்பிடிக்காமல் அவை எதில் சுற்றி வைக்கப்படுகின்றது?
1. பொலித்தீனில்
2. அலுமினியத்தாளில்
3. ரிசுக் கடதாசி
4. டிமைன் தாளில்

384) ஒலிம்பிக் கொடியில் உள்ள ஒன்றோடொன்று இணைந்த வட்டங்களின் எண்ணிக்கை,
1. இரண்டு
2. நான்கு
3. மூன்று
4. ஐந்து

385) இலங்கையின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது?
1. பம்பரகந்த
2. குருந்து ஓயா
3. களனி கங்கை
4. மகாவலி கங்கை

386) இலங்கையில் அரச இலச்சினையில் மலரிதழ் குறிப்பது?
1. வீரம்
2. தன்னிறைவு
3. தூய்மை
4. சௌபாக்கியம்

387) இலங்கையையும் இந்தியாவையும் பிரிப்பது,
1. செங்கடல்
2. கருங்கடல்
3. பாக்கு நீரிணை
4. மகாவலி கங்கை

388) பின்வருவனவற்றுள் பூச்சியுண்ணும் தாவரம் அல்லாதது எது?
1. துளசி
2. துரோசீரா
3. நெம்பந்திஸ்
4. யூற்றிக்குளோரியா

389) இக்குறியீடு குறிக்கும் இடம்,



1. தொலைபேசி வசதி
2. எரிபொருள் நிரப்பு நிலையம்
3. பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
4. கணனி வசதி

390) தேக்கரண்டி ஒன்று கொள்ளும் மருந்தின் அளவை அளப்பதற்கு பொருத்தமான அலகு எது?
1. மில்லி மீற்றர்
2. லீற்றர்
3. மில்லி லீற்றர்
4. மில்லி கிராம்

www.lkedu.lk

391) நீரின் உறைநிலை எவ்வாறு அழைக்கப்படும்,
1. நீராவி
2. பனிக்கட்டி
3. நீர்
4. திரவம்

392) செவிகளினூடாக தகவல்களைப் பெறுவதற்காக எமக்கு தகவல்களை வழங்கும் ஊடகம்,
1. வானொலி
2. கணினி
3. செய்தித்தாள்
4. தொலைக்காட்சி

393) மாமிசம் உண்ணும் மிகப் பெரிய மிருகம்,
1. சிங்கம்
2. புலி
3. துருவக்கரடி
4. கரடி

394) பின்வருவனவற்றுள் பறக்க முடியாத பறவை எது?
1. கோழி
2. மாம்பழக்குருவி
3. தீக்கோழி
4. மைனா

395) அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ள இசைக்கருவியின் பெயர் என்ன?



1. மகுடி
2. புல்லாங்குழல்
3. நாதஸ்வரம்
4. றம்பட்

396) படத்தில் காட்டப்பட்டுள்ள இவ்வுபகரணம் எதற்கு பயன்படும்?



1. சுவரின் நிலைக்குத்தை அறிய
2. சுவரை அளக்க
3. சுவரின் சாய்வை அறிய
4. சுவரில் கோடிட

397) கண் சிகிச்சைக்குரிய சிறப்புமிக்க வைத்தியசாலை அமைந்துள்ள இடம்,
1. கண்டி
2. புத்தளம்
3. மட்டக்களப்பு
4. பொலன்னறுவை

398) இலங்கையின் முதலாவது பிரதமர்,
1. வில்லியம் கோபல்லாவ
2. டட்லி சேனாநாயக்க
3. ஜெ.ஆர். ஜெயவர்த்தன
4. டி.எஸ்.சேனாநாயக்க


399) தமக்குரிய இறைவனை ஒரு நாளில் ஐந்துவேளை தொழுகை செய்யும் மதத்தவர்,
1. பௌத்தர்கள்
2. இஸ்லாமியர்கள்
3. இந்துக்கள்
4. கிறிஸ்தவர்கள்

www.ikedu.lk

STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

400) மனநல வைத்தியசாலை அமைந்துள்ள இடம்,
1. அங்கொட
2. பூகொட
3. வெயங்கொட
4. துஸ்கிரிய

401) தார்க்கறையை போக்க பொருத்தமானது,
1. தேங்காயெண்ணெய்
2. பெற்றோல்
3. மண்ணெண்ணெய்
4. தேசிப்புளி

402) இலங்கை எச்சமுத்திரத்தில் அமைந்துள்ளது?
1. பசுபிக் சமுத்திரத்தில்
2. இந்து சமுத்திரத்தில்
3. அந்தாட்டிக்கா சமுத்திரத்தில்
4. ஆட்டிக் சமுத்திரத்தில்

403) இலங்கையில் மூவின மக்களும் வழிபடும் தளம் அமைந்துள்ள இடம்,
1. சிவனொளிபாதமலை
2. கிரிகல்பொத்த
3. பீதுறுதாலகால மலை
4. நக்கிள்ஸ் மலை

404) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?
1. திருகோணமலை
2. அம்பாந்தோட்டை
3. கொழும்பு
4. மாத்தளை

405) வயிற்றோட்ட நோய்க் காவி எது?
1. எலி
2. ஈ
3. நுளம்பு
4. தெள்ளு

406) வீட்டுத் தோட்டத்தில் வரும் பூச்சிகளை வெறுப்பூட்ட நடப்படும் தாவரம்,
1. ரோஜா
2. துளசி
3. செவ்வந்தி
4. கற்பூரவள்ளி

407) இக்குறியீடு குறிப்பது



1. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியது.
2. நொருங்கக் கூடியது.
3. இப்பக்கம் மேலே.
4. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு.

408) திரிபீடகம் எம்மதத்தவர்களுக்குரிய புனித நூல்,
1. இந்து
2. இஸ்லாம்
3. கிறிஸ்தவம்
4. பௌத்தம்

409) சோறு சமைப்பதற்குரிய அரிசியில் உள்ள கற்களைக் களைவதற்குப் பயன்படுத்தப்படும் பாத்திரம்,
1. மட்கோப்பை
2. அரிக்கஞ்சட்டி
3. மண்பானை
4. அலுமினியப்பாத்திரம்

www.lkedu.lk

410) வத்தாளைக்கிழங்கில் அதிக அளவில் உள்ள போசணைப் பதார்த்தம்,
1. இலிப்பிட்டு
2. மாப்பொருள்
3. புரதம்
4. இலிப்பிட்டு

411) இலங்கையின் தேசிய வைத்தியசாலை அமைந்துள்ள இடம்,
1. யாழ்ப்பாணம்
2. பொலன்னறுவை
3. வவுனியா
4. கொழும்பு

412) இரவு நேரத்தில் இலைகளைச் சுருட்டிக் கொள்ளும் தாவரம்,
1. நாவல்
2. மா
3. அகத்தி
4. வேம்பு

413) **SLDA** என்ற இலச்சினை காணப்படும் பொருள்,
1. பிஸ்கட் பொருட்கள்
2. பற்பசை
3. ரின்மீன்
4. உப்புப் பை

414) நோயாளர்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை பெறும் அரச நிறுவனம்,
1. சதொச
2. ஒசுசல
3. சலுசல
4. லக்சல

415) குதிரையை அடக்குவதற்கு உதவும் கருவி,
1. அங்குசம்
2. சவுக்கு
3. கடிவாளம்
4. மூக்கணாங்கயிறு

416) எலியின் உடலில் வாழும் தெள்ளு காரணமாக எமக்கு ஏற்படும் நோய்,
1. சிக்கன் குனியா
2. பிளேக்
3. பன்றிக் காய்ச்சல்
4. மலேரியா

417) நாய் கடித்த ஒருவருக்கு செய்யும் முதலுதவியாக அமைவது,
1. கடிவாயை மூடிக்கட்ட வேண்டும்.
2. கடித்த இடத்தை சவர்க்காரமிட்டு ஓடும் நீரினால் கழுவ வேண்டும்.
3. மூலிகைச் சாறினை காயத்தில் விட வேண்டும்.
4. மருந்து கட்ட வேண்டும்.

418) நாதஸ்வரம் ஒரு,
1. தோற்கருவி
2. கஞ்சற்கருவி
3. துளைக்கருவி
4. நரம்புக்கருவி

419) உலக தொழிலாளர் தினம் கொண்டாடப்படும் திகதி,
1. ஒக்டோபர் 10
2. பெப்ரவரி 04
3. டிசம்பர் 01
4. மே 01

www.lkedu.lk

420) கறியுப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் பிரதான போசணைக் கூறு,
1. கல்சியம்
2. புரோட்டின்
3. அயடின்
4. இலிப்பிட்டு

421) நாற்புறமும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி,
1. கண்டம்
2. குடாநாடு
3. தீவு
4. சமுத்திரம்

422) கிறிஸ்தவர்களின் பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தவர்,
1. ஆறுமுக நாவலர்
2. மு.நல்லதம்பி
3. சோமசுந்தரப்புலவர்
4. சேர்.பொன்.இராமநாதன்

423) மண்ணெண்ணெய்யினால் தீப்பிடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை,
1. தீயை தண்ணீர் ஊற்றி அணைத்தல்.
2. மணல் இட்டு தீணை அணைத்தல்.
3. தீப்பிடித்த பகுதியை உடனடியாக அகற்றி விடுதல்.
4. வைத்தியரிடம் கொண்டு செல்லுதல்.

424) கீழ்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டில் உள்ள நாய் வாலை ஆட்டும்,
1. விருந்தினர் வீட்டிற்கு வரும் வேளையில்
2. வேறு நாய் தனது வீட்டிற்குள் நுளையும் போது.
3. யாரேனும் நாய்க்கு தொந்தரவு செய்யும் போது.
4. தன்னை வளர்ப்பவர் வெளியில் சென்று வீட்டிற்கு வரும் வேளை

425) நாக்கை நீட்டி இரையை பிடிக்கும் பிராணி அல்லாதது,
1. பாம்பு
2. தவளை
3. தேரை
4. பல்லி

426) தச்சன் பயன்படுத்தும் உபகரணம் அல்லாதது,
1. சாந்தகப்பை
2. சுத்தியல்
3. வாள்
4. துறப்பணம்

427) பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்ற மண் எது?
1. தோட்டமண்
2. களி மண்
3. மணல் மண்
4. செங்கபில மண்

428) சட்டி, பானை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம்,
1. கோடரி
2. வனைசில்லு
3. துறப்பணம்
4. சுவடு வரைசில்லு

www.ikedu.lk

429) டின்பால் டின் ஒன்றை திறக்கத் தேவையான மிகப் பொருத்தமான உபகரணம்,
1. டின் கட்டர்
2. குறடு
3. மூடிதிறப்பான்
4. கத்தி

430) எலுமிச்சம்பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசணைப்பதார்த்தம்,
1. கொழுப்பு
2. விற்றமின் C
3. புரதம்
4. கல்சியம்

431) இங்கு குறிப்பிடப்படும் பறவைகளில் இரவு நேரங்களில் நடமாடும் பறவை எது?
1. ஆள்காட்டிக்குருவி
2. கொக்கு
3. கிளி
4. செண்பகம்

432) பாதுகாப்புக்கண்ணாடி அணிந்து தொழில் செய்பவர்,
1. மேசன்
2. உருக்கி ஒட்டுபவர்
3. குயவன்
4. தச்சர்

433) தட்டாம்பூச்சி என அழைக்கப்படும் உயிரினம் எது?
1. தும்பி
2. கருவண்டு
3. தேனீ
4. வண்ணத்துப்பூச்சி

434) ஆறு கால்களை உடைய பிராணி எது?
1. சிலந்தி
2. மரவட்டை
3. அந்துப்பூச்சி
4. ஒக்டோபஸ்

435) குயவன் பயன்படுத்தும் உபகரணம்,
1. சாந்தகப்பை
2. சீவுளி
3. வனைசில்லு
4. மட்டப்பலகை

436) இரசாயனப் பசளைகளில் ஒன்று,
1. ஆட்டெரு
2. மாட்டெரு
3. கூட்டெரு
4. அமோனியா

437) சூரியக் குடும்பத்தில் மிகப்பெரிய கோள்,
1. புதன்
2. வியாழன்
3. புவி
4. சனி

438) குட்டிகளை தனது வயிற்றுப் பையில் வைத்துப் பாதுகாக்கும் விலங்கு,
1. சிறுத்தை
2. கரடி
3. கங்காரு
4. குரங்கு

439) எவ்வளவு காலமானாலும் கெட்டுப்போகாத உணவுப் பொருள்,
1. தேன்
2. பால்
3. தயிர்
4. கூழ்

www.lkedu.lk

440) அயடீன் அடங்கிய உணவுப் பொருள்,
1. மீன்
2. இறைச்சி
3. பால்
4. கடலுப்பு

441) புல்லாங்குழல் செய்யப் பயன்படுத்தப்படும் தாவரம்,
1. முதிரை
2. தேக்கு
3. மூங்கில்
4. கமுகு

442) பல கால்கள் உள்ள விலங்கு,
1. கரப்பான்
2. மரஅட்டை
3. குளவி
4. சிலந்தி

443) விசர்நாய்க் கடியை உண்டு பண்ணும் விலங்கு அல்லாதது,
1. நாய்
2. குரங்கு
3. பூனை
4. எலி

444) அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய்,
1. மாலைக்கண்
2. நீரிழிவு
3. கண்டமாலை
4. யானைக்கால் நோய்

445) காந்தமொன்றின் ஒத்த முனைவுகள்,
1. கவரும்
2. ஒட்டும்
3. தள்ளும்
4. இழுக்கும்

446) முன்னங்கால்களை கைகளாகப் பயன்படுத்தும் விலங்கு,
1. ஒட்டகம்
2. யானை
3. அணில்
4. குதிரை

447) கறையானின் அடுத்த பருவம் எது?
1. கறையான்
2. குடம்பி
3. குளவி
4. ஈசல்

448) உலகப் புத்தக தினம்,
1. ஏப்ரல் 23
2. ஒக்டோபர் 01
3. மே 01
4. மார்ச் 22

449) ஒரு புல்லாங்குழலில் காணப்படும் துளைகளின் எண்ணிக்கை,
1. ஏழு
2. ஆறு
3. எட்டு
4. ஒன்பது

450) இலங்கையில் விஞ்ஞானப் புனைக்கதைகள் பலவற்றினை ஆக்குவதில் முன்னின்று செயற்பட்ட பெரியார்,
1. ஆனந்த குமாரசுவாமி
2. விபுலானந்தர்
3. ஆதர்.சி.கிளார்க்
4. புலமைப்பித்தன்

www.lkedu.lk

451) வெப்பமானியில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்,
1. மக்னீசியம்
2. இரசம்
3. செம்பு
4. வெள்ளி

452) சீகிரியா ஓவியத்தில் பெண்கள் கையில் வைத்திருக்கும் மலர் எது?
1. அல்லி
2. தாமரை
3. நீலோற்பலம்
4. செவ்வந்தி

453) உலகப் புகழ்பெற்ற மோனாசிசா ஓவியத்தை வரைந்தவர்?
1. கலிலியோ கலிலி
2. மைக்கல் பரடே
3. லியானோடோ டாவின்சி
4. தொலமி

454) தாவரங்களில் உணவு தயாரிக்கும் பகுதி,
1. வேர்
2. தண்டு
3. இலை
4. பூ

455) பளிங்குக் கண்ணை கூர்ந்து நானும் பார்க்க ஆசை அம்மா, நெட்டைக்காது இரண்டும் மேலே நிமிர்ந்து நிற்குதம்மா.... இப்பாடலின் வரிகளால் கூறப்படும் பிராணி எது?
1. மான்
2. பூனை
3. முயல்
4. நாய்

456) வானவில்லில் இல்லாத நிறம்,
1. சிவப்பு
2. கருநீலம்
3. பச்சை
4. கறுப்பு

457) இலங்கையின் சுதந்திரத்திற்காக செயலாற்றியவர்,
1. மொனராவில கெப்பட்டிப்பொல திசாவை
2. கொங்காலே கொட பண்டா
3. வண எஸ்.மகிந்த
4. சேர். டீ.பி. ஜயதிலக



458) கொல்லன் கம்மாலையில் நெருப்பினை எரியச் செய்வதற்கு உதவுவது,
1. இடுக்கி
2. புகைதுருத்தி
3. மின்விசிறி
4. மின்விளக்கு

459) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?
1. 1948.02.04
2. 1947.02.04
3. 1948.04.02
4. 1947.04.02

www.lkedu.lk

460) இலங்கையின் தேசிய உணவு எது?
1. ரொட்டி
2. நெல்லரிசிச்சோறு
3. பாற்சோறு
4. அப்பம்

461) பின்வருவனவற்றில் சர்வதேச விளையாட்டாக அமையாதது,
1. ஹொக்கி
2. பல்லாங்குழி
3.கிரிக்கெட்
4.வலைப்பந்து

462) தேசிய கீதம் பாடும் போது இருகால்களையும் எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும்?
1. **W** வடிவில்
2. **L** வடிவில்
3. **V** வடிவில்
4. **U** வடிவில்

463) கிரிக்கட் விளையாட்டின் ஆரம்பமான நாடு,
1. அமெரிக்கா
2. யப்பான்
3. இந்தியா
4. இங்கிலாந்து

464) ஆழமற்ற குளம் குட்டைகளில் மீன்பிடிக்க உதவும் உபகரணம்,
1. நாம்புவ
2. பெருவலை
3. அத்தாங்கு
4. பறி

465) பொதி செய்யப்பட்ட பெட்டிகளில் இவ்வாறான அடையாளம் தென்படும். அதன் அர்த்தம்,



1. நனையாமல் பாதுகாக்கவும்
2. கவனமாக கையாளவும்
3. உள்ளே உடையக் கூடிய பொருள் உள்ளது.
4. சூரிய ஒளி படாமல் பாதுகாக்கவும்

466) காற்றின் திசையை அறியப் பயன்படும் கருவியின் பெயர் என்ன?
1. காற்றுத் திசைகாட்டி
2. பாரமானி
3. காற்று வேகமானி
4. வெப்பமானி

467) கப்பல்களில் மஞ்சள் நிறக்கொடி பறக்க விடுவதற்கான காரணம் என்ன?
1. ஆபத்து
2. மரணம்
3. தொற்று நோய்
4. துக்கம்

468) இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படாதது எது?
1. சிங்கம்
2. வெள்ளரசு இலை
3. பூரண கும்பம்
4. வாள்

www.lkedu.lk

469) புகையிரதம் பயணத்தைத் தொடர்வதற்கு எந்நிறக் கொடி காட்டப்படும்?
1. பச்சை
2. மஞ்சள்
3. சிவப்பு
4. கறுப்பு

470) 119 எனும் தொலைபேசி இலக்கம் எத்தகைய சேவை தொடர்பாகப் பயன்படுத்தத்தக்கது,
1. அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக அறிவதற்கு
2. உள்ளூர் தொலைபேசி சேவைகள் தொடர்பாக அறிவதற்கு
3. தொலைபேசி கட்டண விபரங்களை அறிவதற்கு
4. சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்கு அறிவிக்க

471) இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவரின் ஒழுங்கினைச் சரியாகக் காட்டும் வரிசை,
1. ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்
2. போர்த்துக்கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்
3. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்.
4. ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர்

472) குளவி கொட்டினால் முதலில் செய்ய வேண்டியது,
1. கொட்டிய இடத்தில் துணியினால் கட்டுதல்.
2. கொட்டியரை மருத்துவரிடம் கொண்டு செல்லுதல்.
3. கொட்டிய இடத்தில் பழப்புளியைப் பூசுதல்.
4. கொட்டிய இடத்தை சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

473) இலங்கையில் விற்பனையாகும் மண்ணெண்ணெயின் நிறம் என்ன?
1. வெள்ளை
2. சிவப்பு
3. நீலம்
4. பச்சை

474) உணவை பாதுகாக்கும் தற்போது நவீன முறைகளில் ஒன்று எது?
1. குளிரூட்டல்
2. வெல்லப்பாகிடல்
3. உலர வைத்தல்
4. வற்றலாக்குதல்

475) கண்பார்வை நன்றாக விருத்தியடைந்து காணப்படும் பறவை எது?
1. புறா
2. கழுகு
3. கொக்கு
4. கிளி

476) இலங்கையில் உள்ள மாகாணங்கள் எத்தனை?
**1. 09**
**2. 25**
**3.08**
**4.16**

477) கையில் ஒட்டிய பலாப்பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தப்படுவது,
1. குளிர் நீர் 3. தேங்காயெண்ணெய்
2. வெந்நீர் 4. சவர்க்காரம்

478) இலங்கையில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
**1. 26 3.24**
**2. 25 4.27**

479) பின்வருவனவற்றில் பானம் தயாரிக்கப் பயன்படும் வித்து,
1. தேயிலை 3. கறுவா
2. கோப்பி 4. தேசிக்காய்

480) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்,
1. காலி 3. காங்கேசந்துறை
2. திருகோணமலை 4. மன்னார்

481) தேசிய விழாக்களுள் அடங்குவது,
1. நத்தார் 3. சுதந்திரதினம்
2. தைப்பொங்கல் 4. பொசன்

482) வசந்தகாலப்பறவை எது?
1. காகம் 3. கிளி
2. குயில் 4. ஆந்தை

483) உடலின் சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு எது?
1. கரம் 3. சதுரங்கம்
2. கயிறிழுத்தல் 4. சோகி விளையாட்டு

484) கூட்டெரு தயாரிக்கப் பயன்படும் பொருள்,
1. உடைந்த பீங்கான் 3. பிளாஸ்டிக்
2. மாட்டுச்சாணம் 4. கடதாசி

485) இலங்கையில் உள்ள சர்வதேச விமான நிலையம் எங்கு அமைந்துள்ளது?
1. கட்டுநாயக்கா 3. திருகோணமலை
2. ஆனையிறவு 4. காலி

486) தலதா மாளிகை அமைந்துள்ள இடம்,
1. கொழும்பு 3. கண்டி
2. மன்னார் 4. திருகோணமலை

www.lkedu.lk

487) உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு,
1. இந்தியா
2. வத்திக்கான்
3. சீனா
4. மலேசியா

488) பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயம் அல்லாதது,
1. தமக்குரிய சந்தர்ப்பம் வரும் வரை காத்திருத்தல்.
2. பயணத்தில் கவனத்துடன் செயற்படுதல்.
3. தன்னடக்கம் பேணாது பயணித்தல்.
4. ஏனையோரின் சௌகரியம் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

489) இக்குறியீடு குறிப்பது
1. மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடியது.
2. நொருங்கக் கூடியது.
3. இப்பக்கம் மேலே.
4. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு.



490) அறுந்த வால் மீண்டும் வளரத்தக்க பிராணி,
1. அணில்
2. உடும்பு
3. கபறகொயா
4. பல்லி

491) விளையாட்டின் மூலம் விருத்தியாகும் நற்பண்புகளுள் அடங்காத விடயம் யாது?
1. சகிப்புத்தன்மை பேணுதல்
2. விட்டுக்கொடுத்தல்
3. தலைமைக்குக் கட்டுப்படுத்துதல்
4. பிறருடன் இணங்காதிருத்தல்

492) இலங்கை குடியரசாக மாறிய ஆண்டு,
1. 1945
2. 1952
3. 1948
4. 1972

493) சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் எது?
1. 1919
2. 1231
3. 1929
4. 119

494) மலேரியா நோயைப் பரப்பும் நுளம்பு எது?
1. ஈடிஸ்
2. அனோபிளஸ்
3.கியூலெக்ஸ்
4.திஹோமியா

www.lkedu.lk

495) இலங்கையில் அதிகளவு வாகன நெரிசல் கொண்ட நகரம் எது?
1. கொழும்பு
2. பொலன்னறுவை
3. கண்டி
4. காலி

496) தலதா மாளிகை அமைந்துள்ள மாகாணம் எது?
1. மத்திய
2. மேல்
3. வடக்கு
4. வடமத்திய

497) ஒரு மாகாணத்துக்கு பொறுப்பான நிர்வாக அதிகாரி யார்?
1. அரசஅதிபர்
2. கிராமநிலதாரி
3. ஆளுநர்
4. அமைச்சர்

498) கவ்வாத்து செய்யப்பட வேண்டிய தேவையில்லாத தாவரம் எது?
1. திராட்சை
2. தேயிலை
3. கொய்யா
4. கொடித்தோடை

499) இலங்கை கிரிக்கட் அணி முதன் முதலாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆண்டு எது?
1. 1996
2. 2006
3. 1999
4. 1948

500) பௌத்தர்களும் இந்துக்களும் சேர்ந்து கொண்டாடும் பண்டிகை,
1. சித்திரைப் புத்தாண்டு
2. பொசன்
3. வெசாக்
4. தீபாவளி

501) முட்டைக் கோதில் காணப்படுவது,
1. கொழுப்பு
2. விற்றமின் **C**
3. கல்சியம்
4. இரும்பு

502) குறித்த பிரதேச மக்களுக்கு மட்டும் தகவல் வழங்கப் பொருத்தமான ஊடகம்,
1. தொலைபேசி
2. ஒலிபெருக்கி
3. வானொலி
4. பத்திரிகை

503) மாணவர் நூலகத்தினுள் நடந்து கொள்ள வேண்டிய விதமல்லாதது,
1. அமைதியைப் பேணி நூல்களை வாசித்தல்.
2. எடுத்த நூல்களை மீண்டும் எடுத்த இடத்தில் வைத்தல்.
3. நூலக நூல்களைக் கவனமில்லாமல் கையாளுதல்.
4. ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாத வகையில் நடத்தல்.

504) தனி விளையாட்டு,
1. எல்லே அடித்தல்
2. ஈட்டி எறிதல்
3. கிட்டிப்புல்
4. கிளித்தட்டு

www.lkedu.lk

505) தேசப்படத்தில் ஆறு, குளம் , கால்வாய், கடல் போன்ற நீரோடு சம்பந்தப்பட்டவை குறிக்கப்படும் நிறம் எது?
1. நீலம்
2. கடும்மஞ்சள்
3. இளம்பச்சை
4. கறுப்பு

506) வெள்ளை நிற முட்டையிடும் பிராணி,
1. நத்தை
2. ஆமை
3. தவளை
4. பல்லி

507) தேசப்படங்களில் சிவப்பு நிறமாக எதனைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்,
1. பெருந்தெருக்கள்
2. உயர்ந்த நிலம்
3. நதிகள்
4. புகையிரதப்பாதை

508) வீதி விபத்து நிகழக்கூடிய சந்தர்ப்பம்,
1. பாதையில் பயணிக்கும் வாகனங்களைக் கவனித்துக் கடத்தல்.
2. மிதி பலகையில் பயணித்தலை தவிர்த்தல்.
3. வளைவான இடங்களில் பாதையைக் கடக்க முற்படுதல்.
4. இருவர் ஒரு சைக்கிளில் பயணம் செய்தல்.

509) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி,
1. உடும்பு
2. ஓணான்
3. கபறக்கொயா
4. நத்தை

510) காந்தத் துண்டினால் கவரக்கூடிய பொருள் எதனால் உருவாக்கப்படத்தக்கதாக காணப்படும்,
1. இரும்பு
2. பித்தளை
3. அலுமினியம்
4. பிளாத்திக்கு

511) வெண்புறா சின்னத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. சமாதானம்
4. நீதி

512) தொலைவிலுள்ள இரையைக் கண்டு அதனைப்பிடிக்கும் ஆற்றல் கூடிய பறவை,
1. கொக்கு
2. கழுகு
3. காகம்
4. மழைக்குருவி

513) பூச்சியினங்களின் கால்களின் எண்ணிக்கை எத்தனை?
1. நான்கு
2. எட்டு
3. ஆறு
4. பத்து

514) திலாப்பியா மீன் தன் குஞ்சுகளை எவ்வாறு பாதுகாக்கும்?
1. வாயினுள் எடுத்து
2. தூர இடத்திற்கு அழைத்து
3. செட்டையினுள்
4. எதிரியுடன் சண்டையிட்டு

www.lkedu.lk







மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

**Medium**

**தமிழ்/ English**

**தரம்**
**01-A/L**

**76667-4945**

**தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்**
**தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன**

www.learneasy.lk || www.lkedu.lk